# தோரணம்
# Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newsletter
ஓலை - 1 | வைகாசி— 2016 | தோரணம் - 4


## மேருபுரம் பத்திரகாளி அம்மன் கோவில் தேர்



**Walthamstow**

**24~04~2016**








Click Here
to view more...


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர்

வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்

**SRI**

**SELVA**

**VINAYAGAR**

**TEMPLE**

**ILFORD**




**ஸ்ரீ**

**செல்வ**

**விநாயகர்**

**ஆலயம்**

**இல்போட்**



## இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய
## பேழஸ்தாபன அழைப்பிதழ்

நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் வைகாசி மாதம் 24ம் திகதி (06-06-2016) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு மேல் 10.45 மணிக்குள் புதிய ஆலய கல் திருப்பணியை முன்னிட்டு பேழஸ்தாபனம், சங்கஸ்தாபனம், பஞ்சலோகஸ்தாபனம் மற்றும் நவரத்னஸ்தாபனம் நடைபெற இறைவன் திருவருள் கூடியுள்ளதால் பக்தகோடிப் பெருமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் திருவருளையும் இப்பிறவிப்பயனையும் பெற்றுய்யுமாறு ஆலய நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

பக்தர்களின் வசதி கருதி பேழஸ்தாபன ஸ்தாபிதம் திங்கள்- செவ்வாய் இரண்டு நாட்களும் 06-06-2016—07-06-2016 இரவு 8.00 மணி வரை தொடர்ந்து நடைபெறும். பக்தர்கள் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக ஏதாவதொரு ஸ்தாபனத்தை தங்கள் கைகளாலேயே செய்வதற்கு மிகக்குறைந்த கட்டணமாக £101.00மட்டுமே அறவிடப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க்கையில் மேற்படி ஆலயத்தில் ஒரு தடவையே நடக்கவிருக்கும் இந்நற்பணியில் கலந்து கொண்டு வாழ்நாளில் பெரும்பேற்றினை பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகம் மற்றும் ஆச்சாரியார்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

-ஆலய நிர்வாகம்

## சித்திரைப்புத்தாண்டு விழா

துர்முகி வருட சித்திரைப் புத்தாண்டு விழா எமது சங்க ஆலயத்தில் 13-04-2016 அன்று மிகச் சிறப்பாக திரு. வ.இ. இராமனாதன் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள் அவர்கள் ஆலய பூசையை ஆரம்பித்து வைக்க இலண்டன் முருகன் கோயில் பிரதம குருக்கள் கைலை நாகநாதசிவம்குருக்கள் அவர்கள் விசேட ஆராதனைகளை நடாத்தினார். பல வருடங்களாக ஒவ்வொரு சித்திரைப் புத்தாண்டின் போதும் கைலை நாகநாதசிவம் குருக்கள் எமது சங்க ஆலயதிற்கு வருகை தந்து ஆலயம் நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கு வகிப்பது வழக்கம். அத்துடன் அவரது பிறந்த தினம் அன்று வருவது மிக விசேடமாகும். இம்முறை அவரது 60 வது பிறந்த நாளென்பதால் அதுவும் விசேடம். அவருக்கு எமது சங்கத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். பிரதம குருக்கள் அவர்கள் தனது உரையில் தமக்கும் சை.மு.சங்கத்திற்குமான 20 வருடகால தொடர்பினையும் சங்கத்தின் வளர்ச்சியையும் கூறி துர்முகிவருடம் பற்றிய விளக்கத்தினையும் எடுத்துக்கூறினார. அதனைத் தொடர்ந்து இசை நி-கழ்ச்சியும் கலசம் ஆசிரியரான திரு. ஜெகதீஸ்வரன்பிள்ளை அவரகளின் உரையும் இடம் பெற்றது. எமது சங்க வெளயீடான கலசம் 81வது இதழ் அதன் ஆசிரியரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இன்றைய புத்தாண்டு தினத்தின் மி முக்கிய அம்சமாக சைவமுன்னேற்றச்சங்கத்தின்சாரபில் அருள்மிகு சிவகாமி மாதர் அணி என்றொரு பிரிவு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதன் பொறுப்பாளராக திருமதி பாஸ்கரி தயாளன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.இன்றைய வைபவ உபயகாரரான திரு. கு. சிதம்பரப்பிள்ளை அவர்களால் சுபநேரத்தில் அங்கு வந்திருந்த அனை-வருக்கும் சைவிசேசம் வழங்கப்பட்டது. இரவு போசனத்துடன் புது வருடப்பிறப்பு நிகழ்வுகள் இராப்போனத்துடன் இனிதே நிறைவேறியது.



**“ If we dig precious things from the land, we will invite disaster “**

**“When we take one step toward to God,
he takes seven steps toward us ”**

**-Indian Proverb**







## ஆலய, சங்க நிகழ்வுகள்
## வைகாசி, ஆனி மாத (MAY & June) 2016



**02-05-2016** திங்கள் திருநாவுக்கரசர் குருபூசை

24-05-2016 புதன் திருஞானசம்பந்தர் குருபூசை

28-05-2016 சனி சங்க மூத்தோர் நிலைய
“பொன் மாலை வேளை”

08-06-2016 புதன் சேக்கிழார் சுவாமிகள் குருபூசை

21-06-2016 செவ்வாய் சர்வதேச யோகா நாள்

23-06-2016 வியாழன் ஆனித் திருவோணம் சம்பத்சரா
அபிஷேகம். ஆலய கும்பாபிஷேக
8ம் ஆண்டு விழா
**(Temple consecration 8th anniversary)**

# வேண்டுகோள்

**எமது அன்பர்கள் ஆதரவாளர்களிடம்**
**ஒரு வேண்டுகோள்**

**ஈமக்கிரியைகளின்போது**
**திருமுறைகள் ஓதுவதற்கு விரும்புவர்கள்**
**எமது காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு**
**வேண்டப்படுகிறீர்கள்.**

**சைவ முன்னேற்ற சங்கம்** Telephone: 0208 514 4732

## பொன்மாலை வேளை

**28-05-2016 சனிக்கிழமை மாலை 4.00 மணிமுதல்**

**இடம்:** Woodbridge HighSchool,St.Barnabas Road. Wood Green
IG8 7DQ

**நாடகங்கள். பாட்டுகள். நடனங்கள்(கிராமிய நடனங்கள் உட்பட) இன்னும் பல பல்சுவை நிகழ்ச்சிகள் மூத்தோர்களின் பங்களிப்புடன் இடம் பெறுகின்றன.**

**பிரவேசம் இலவசம்** Admission Free

**தூய்மை என்பது உடல், உள்ளம் இரண்டிலும் இருக்கவேண்டும். இதுவே அறவாழ்வின் முதற்படி. மனதைத் தூய்மைப்படுத்த உணவு உட்கொள்ளல், உடை அணிதல், அன்றாடப் பழக்கவழக்கங்களில் உங்கள் மனதைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தல் உடல், உள்ளம் இரண்டையும் தூய்மைப்படுத்துவதற்கேயாகும். உங்களது எண்ணம், சொல் , செயல் இவை மூன்றிலும் காணப்படுவதே தூய்மை.**

# Hinduism

## Scientifically Proven Religion in the Planet

By. Mr. Sothiratnam Niranjan MSET, MinstLM

Disclaimer

All rights are those of the original vedio holders. At the time of publishing this newsletter, I tested the vedio clips with IOs, Android and Windows devices. I am not taking any responsibilities on non working vedio clips in the later days. I have simply made a collection of what I whatched and enjoyed and like to share with the scientific knowledge hunters.

**India's mysterious secret past**

**Is Rama just a Myth or really a historical Figure?**
Lets Find it out

**Historical RAMA:**

The Hindu History of Ancient INDIA. From History channel

**Rama Setu:**

An Engineering Marvel of 5076 BCE (Tamil)

**Palace of King Ravana:**

Ramayan is a true story. modern scientists believe it to be a place made by aliens but a proper description is given in Ramayan
From History channel

**A 1200 Year Old Vimana - Alien Flying Machine?**

**Ramayana is not Mythology:**

The Great King Ravanan, Legendary King of Lanka, was pioneer in Science, Music, architecture, Air-nautical Engineering, and war fair technologist.

In our next newsletter,

Don't Miss to click & Watch the Scientifically proven Taj Mahal is an Ancient Hindu Shiva Temple, Angkor Wat Built by Descendant of Raja Raja Cholan, Ancient ,

Tamil Civilization Truths Hidden by The Indian Government

## தலங்கள் தரிசித்தல் (யாத்திரை என்பது காலில் செருப்பு இல்லாமலும் குடைகளின் உதவியின்றியும் நடந்து போவதையே யாத்திரை என்பர்)

**12 ஜோதிர்லிங்கம் பற்றி சிறு குறிப்புகளும் தலங்களும் சுற்றுப்புற படங்களும்**

-வை.சிவனருட்செல்வர்

1.கேதாரிநாத். - இது ஒரு சிவத்தலமாகும். கடல் மட்டத்திலிருந்து கிட்டத்தட்ட 12000அடி உயரத்தில் இமயமலைப ் பகுதியில் உள்ள தலமாகும் புராண வரலாற்றுப்படி பாண்டவ - கௌரவ யுத்தமுடிவில் சிவபெருமானைத் தேடி ஆசி பெற பாண்டவரகள் கும்பகாசி சென்றபோது சிவன் பாண்டவர்களை எதிர்கொள்ள விரும்பாமல்(காரணம் பதவியாசையால் உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட யுத்தத்தினால் பல கோடி மக்கள் இறந்ததை விரும்பாத) சிவன் கும்பகாசியில் ஒளிந்ததாகவும் பின் அங்கிருந்து எருது வடிவில் எருதுகளுடன் சேரந்து கேதாரிநாத்தில் மறைந்திருந்தபோது பாண்டவர்களில ஒருவனான பீமன் ஒரு எருதுவின் காலில் கட்டியிருந்து மணியின் ஒலிமூலம் இந்த எருதுதான் சிவபெருமான் என்பதை உணர்ந்து அதனை தன் பலம்கொண்டு இறுக்கி அணைக்க சிவன் அதே இடத்தில் இலிங்கமாக அமர்ந்ததாக அறியக்கிடைக்கிறது. அதேயிடத்தில் பஞ்சபாண்டவர்கள் சிவாலயத்தைக் கட்டினதாகவும் பின்பு ஆதிசங்கரர் அவ்வாலயத்தை புனரமைத்தாகவும் தகவல்கள் உண்டு. ஆலயத்தினுள்ளே பாண்டவர்களுடைய சிலைகளும் இன்னும் பல சிலைகளும் உண்டு. ( நாங்கள் ஆலயம் சென்றது 2013 ஆண்டு கங்கை பெருக்கெடுத்து ஆலயம் தவிர்ந்த மற்றைய சகல கட்டடங்களும் அழிந்த பின்பே. சுமார் 1லட்சத்திற்கு மேற்பட்டோர்களை அப்போதைய வெள்ளம் பலிகொண்டது) நாங்கள் அங்கு ஒரு ஹெலிகொப்டர் மூலமே 10 நிமிட பயணம் செய்தோம். தங்குவதற்கு வசதியில்லை. நாங்கள் போயி ருந்தபோதுதான் புதுப்புது கட்டடங்கள் யாத்திரீகளுக்காக கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பகலில் பல மணிநேரம் ஆலயச் சுற்றாடலில் தங்க அனுமதியில்லை. ஆலயம் ஏபிரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை மட்டுமே திறந்திருக்கும். நவம்பர் மாதம் சிவாலயத்தினுள்ளே ஒரு நெய்விளக்கேற்றிவிட்டு கதவைப் பூட்டிவிடுவார்கள். மற்றைய சிறு தெய்வங்களின் சிலைகளை மலையடிவாரத்தில் உள்ள கோயில்களில் கொண்டுவந்து பூசைகள் செய்வார்கள். பின்பு ஏபிரல் மாதம் ஆலயம் திறக்கும்போது பார்த்தால் அந்த நெய்விளக்கு அணையாமல் எரிந்து கொண்டேயிருக்குமென்பார்கள். இடைப்பட் ஆறுமாதங்களும் பனிபொழிந்து கோயில் இருக்குமிடம் தெரியாமல் பனியால் மூடப்படடிருப்பதே காரணமாகும். கோயிலும் அதன் சுற்றாடல் பற்றி படங்களையும் கீழே அழுத்துவதன் மூலம் நீங்கள் பார்கலாம்.






•

### யோகர்சுவாமிகளின் மாதாந்த நினைவுதினம் - 2016

**யோகர் சுவாமிகளின் பிறந்த தின நட்சத்திரமான ஆயிலியம் வரும் மாதாந்தின தினங்களில் எமது ஆலயத்தில் அவரது நினைவு தினம் அனுஷ்டிக்கப்படும் என்பதை அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

**13-05-2016 - ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு**

**09-06-2016 - ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு**

**Karma moves in two directions. If we act virtuously, the seed we plant will result in happiness. If we act non-virtuously, suffering results.**

Sakyong Mipham

# பிரித்தானிய சைவ திருக்கோயில் ஒன்றியம்
# மாநாடு—2016
# முதல் நாள் -30-04-2016 இல்போட் (இலண்டன்)




பிரித்தானிய சைவ திருக்கோயில் ஒன்றியத்தின் 17வது மாநாடு 20-04-2016, 01-05-2016 ஆகிய இருநாட்களிலும் இலண்டன் மாநகரின் நடைபெற்றது. இரண்டு நாள் நிகழ்வுகளுக்கும் இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் அறிஞர்கள் பலர் சமூகம் தந்து "நடராஜ தத்துவமும் திருமந்திரமும்" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்து உரையாற்றினார்கள். முதலாம் நாள் நி-கழ்வுகள் இல்போட் நகரில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பைக் கீழே காண்கிறீர்கள்.எமது சைவ மூன்னேற்ற சங்கத்தின் சார்பில் எமது தலைவர் உரையாற்றினார்.









# சைவ முன்னேற்ற சங்கம்(U.K)

**அன்புடையீர்**

## பெரியபுராணத் தொடர் விரிவுரை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனாக்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்
அலலிமென முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆருரன்ஆரூரில்அம்மானுக்குஆளே!

– சுந்தரரின திருத்தொண்டர் தொகை 1ம் பாடல்

திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெருமைமிக்க சிவனடியார்களின் சிறப்பைச் சொல்லும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு மீண்டும் எங்கள் ஆலயத்தில் இடம்பெற சிவபெருமான் திருவருள் கிட்டியுள்ளது. சென்ற ஆண்டுகளில் ஐந்து முறை இடம்பெற்று பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தப் பக்திமிக்கத் திருப்பணியில் சிவனடியார்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லியும், கேட்டும் அருள் பெறுமாறு உங்களைப் பணிவாக அழைக்கின்றோம்.

பெரியபுராணம் சிதம்பரம் ஆனந்த நடராஜப் பெருமான் சந்நிதியில் ஒரு சித்திரை மாதத் திருவாதிரைத் திருநாளிள் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு நிகழும் துர்முகி ஆண்டு திங்கட்கிழமை (09.05.2016) அன்று அமைகின்ற சித்திரைத் திருவாதிரை நட்சத்திர வேளையில் இரவு 8.00 மணிக்கு நடைபெறும் ஆலயப்பூசையின் பின்

| | | |
|---|---|---|
| 09.05.2016 திங்கட்கிழமை | பெரிய புராணம் இன்றைய வாழ்வில் பெரிய புராணத்தின் பங்கு | கயிலை சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள் |
| 13.05.2016 வெள்ளிக்கிழமை | தடுத்தாற்கொண்ட புராணம் சுந்தரரின் மண்ணுல வருகையும் நோக்கமும் | சிவஸ்ரீ பா வசந்தக்குருக்கள் |
| 20.05.2016 வெள்ளிக்கிழமை | தில்லைவாழ் அந்தணர் சிறப்பும் சிதம்பரமும் | திரு க ஜெகதீஸ்வரன் |
| 27.05.2016 வெள்ளிக்கிழமை | திருநீலகண்ட நாயனார் இல்வாழ்வின் சோதனைகளும் அவற்றைத் தாங்கும் அறவழிகளும் | திரு துரை சிவபாலன் |
| 03.06.2016 வெள்ளிக்கிழமை | இயற்பகை நாயனார் அடியார் விரும்பும் பொருள் எதுவானாலும் ஈயும் பண்பு | திரு சதாசிவம் ஆனந்ததியாகர் |
| 10.06.2016 வெள்ளிக்கிழமை | இளையான்குடிமாற நாயனார் திருவமுது மாண்பு செய்தலே திருத்தொண்டு என்ற | திரு ச சிறீரங்கன் |
| 17.06.2016 வெள்ளிக்கிழமை | மெய்ப்பொருள் நாயனார் சிவவேடமெல்லாம் சிவமே எனும் சைவப்பண்பு | திரு வ இ இராமநாதன் |
| 24.06.2016 வெள்ளிக்கிழமை | விறன்மிண்ட நாயனார் அடியாரை வணங்காதவர் நமக்கு புறம் என்ற திறம் | திருமதி தயாளினி மோகனராசா |
| 01.07.2016 வெள்ளிக்கிழமை | அமர்நீதி நாயனார் அன்பால் துலாத் தட்டை உயர்த்திய பெருமை | திருமதி சரோஜா கனகசபேசன் |

அனைவரும் வந்து அடியார் வரலாறு கேட்டு அருள்பெறுக.

மா.இந்துசேகரன்
பொதுச்செயலாளர்

ம.இரவீந்திரதாஸ்
சமயச்செயலாளர்

## நால்வர் தமிழ்பாடசாலை மாணவர்களின தமிழ்ப்புத்தாண்டு நிகழ்வு 17~04~2016

எமது சங்கத்தினரரல் கடந்த பல வருடங்களாக நடாத்தப்பட்டு வரும் நால்வர் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின்துமிழ்புத்தாண்டு தினம் எமது ஆலயத்தில் நடைபெற்றது. பூாடசபலையில் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். எமது ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ ரமேஸ் குருக்கள் அவரகள் ஆலய பூசை முதலியனவற்றை நடாத்திவைத்தார்.மாணவர்களின் தேவாரத்துடன் ஆரம்பமான நிகழ்வுகள் அவர்களின் சிறு சிறு பங்களிப்புகளுடன் நடைபெற்றது. அன்று வருகை தந்திருந்து அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை நிர்வாகத்தினரால் புத்தாண்டையொட்டி பரிசில்கள் வழங்கப்பட்டன. மதிய போசனத்துடன் புத்தாண்டு கொண்டாட்டம் இனிதே நிறைவுபெற்றது.









**When you carry out acts of kindness you get a wonderful feeling inside. It is as though something inside your body responds and says, yes, this is how I ought to feel.**

Harold Kushne

**The best and most beautiful things in the world cannot be seen, nor touched… but are felt in the heart.**

Helen Keller

# சைவ முன்னேற்ற சங்கம்

## சைவ சித்தாந்த மையம்

## சைவப்புலவர் பரீட்சை –2016



தீருவாவடுதுறை ஆதீனத்தின் அங்கீகாரத்துடன் சைவ முன்னேற்ற சங்கத்தில் இயங்கிவரும் சைவ சித்தாந்த பயிற்சிமையத்தில் திரு. சூ.யோ.பற்றிமாகரன் அவர்களால் பல மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு சைவ சித்தாந்த ரத்தினங்களாகவும், திருமந்திரமும் வாழ்வியலும் பட்டறையில் சித்தியடைந்தும், இன்னும் பலர் திருவாசகம், திருக்குறள் போன்றவற்றில் தெளிவுபெற்றும் பயனடைந்து வருகிறார்கள். அந்த வரிசையில் இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் ~ 2016 நடாத்தப்பட்ட சைவ்பபுலவர் பரீட்சைக்கு பயிற்றுவிக்கப்பட்டு கடந்த மாதம் நடைபெற்ற பரீட்சையில் பங்குபற்றியவர்களை மேலே காணலாம்.

## பெரிய புராண விரிவுரை

எமது சங்க ஆலயத்தில் கடந்த 09~05~2016 தொடக்கம் பெரியபுராண தொடர்விரிவுரை ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை பெரியபுராண விரிவுரைகள் நடைபெறும். ஆதரவாளர்கள் அனைவரையும் இந்நிகழ்வுகளில் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(நிகழ்ச்சி நிரலை 9ம் பக்கம் பார்க்கவும்)

## Sampoor Resettlement Project







அன்புடையீர்

25.03.2016 முதல் சம்பூரில் 216 ஏக்கர் நிரப்பில் 546 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து உதவ நாம் நிதி திரட்டுகின்றோம். இப்பணிக்கு உதவ முன்வருமாறு பணிவாகக் கேட்டு உங்களின் ஒத்துழைப்பை வேண்டுகின்றோம். நன்றி

தொடர்புகளுக்கு: வி. செ. வாமனானந்தன் வெளிநாட்டுத்துறை திட்டச் செயலாளர் 07958 142288 மா. இந்துசேகரன் பொதுச் செயலாளர் 07872 144794 சோ. நிரஞ்சன் பொருளாளர் 07876 404354

Saiva Munnetta Sangam (UK) 2 Salisbury Road, Manor Park, London E12 6AB. Tel : 020 8514 4732 Registered Charity No: 292085 www.saivamunnettasangam.com email: smsukinfo@gmail.com

உதவி கேட்டு அனுப்பப்பட்ட கடிதம் கீழே இணைக்கப்பட்டுள்ளது.

Dear friend,

I hope you are aware that 546 families were resettled in the 2nd phase of Sampoor resettlement on 25 March 2016 following the release of 216 acres of land occupied by the navy and others. I attach some photos showing the living conditions of these 546 families. I visited Sampoor on 23 April and saw their living conditions.

I also met the GA to discuss these families needs. He hasn't received any commitments to assist these families apart from the hand out of Rs 35,000 by the government towards the resettlement. UN-CHR may provide temporary housing in the future but it has still not committed yet. We were asked whether we could provide some temporary shelters as we did in the 1st phase. I am sure you are aware that we built 55 shelters and toilets with the financial assistance of Shri Kanagathurkkai amman temple Ealing, TTVK Singapore, Sivanarulillam, and Assist RR. We hope we can do more temporary houses to assist some of these families with the help of the Diaspora.

Importantly, the GA asked whether we could provide some toilets as a matter of urgency, as there are nearly 1000 women and girls in this latest resettlement, who have no access to toilets. They are also living in a cram condition as you can see from the photos. In order to help these unfortunate people, we were asked whether we could provide at least 20 toilets as a matter of urgency so that they all can share them until they get their own toilets in the future. We can build semi-permanent toilets at a cost of £125 (Rs 25,000). They can then be made permanent at a later stage.

Please kindly pass this email to your friends and family and encourage them to help these people, who are back in their lands after nearly 10 years.

Best regards,